# இலக்கியங்களில் மகளிர் - மாண்பு

**முனைவர். கோ.சுப்பிரமணியன்**

*உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,*
*தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி, பெரம்பலூர்.*

***ஆய்வுச் சுருக்கம்.***

**பெண்கள் நாட்டின் கண்கள் என்பதற்கு இணங்க இலக்கியங்களில் பல சிறப்புகளோடு வளம் வருகின்றனர். சங்க இலக்கிய காலம் முதல் காப்பிய காலம் தொட்டு இக்காலம் வரை மகளிரின் பெருமையினை கவிஞர்கள் பல்வேறு நற்குணங்களை உடையவளாக படைத்து வருகின்றனர். எதையும் செய்யும் ஆற்றல் உடைய பெண்ணே தனது போக்கை மாற்றிக் கொண்டு தாய்மை குணத்தோடு உலக உயிர்களை காப்பதையும் இலக்கியங்கள் கூறுகின்றது. தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்து சுற்றத்தாருக்கும் மதிப்பளித்து காத்து வருபவள் பெண் என்பதை எவராலும் மறுக்க முடியாது. என்பதை பலவாறு இலக்கியங்களில் காண முடிகின்றது.**

**ஆய்வு அணுகுமுறை**

**இலக்கியத்திலும் இயல்பு வாழ்க்கையிலும் மகளிர் மாண்பு போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளது .இதற்கெல்லாம் அவர்களின் அர்ப்பணிப்பு மனிதநேய பண்பு, தாய்மைக் குணம் ஆகியவையாகும். இதன் காரணமாக உயிர்களை மீது கொண்ட அன்பு மகளிரின் மாண்பை பெருமைப்படுத்தி வருவதை இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். இந்த ஆய்வும் மகளிரின் விட்டுக் கொடுக்கும் மாண்பை எடுத்துக் காட்டும் விதமாக அமைகின்றது.**

**சுருக்க குறியீட்டு விளக்கம்:**

1. பா.வே.பாவேந்நர்.
2. குறள். திருக்குறள்.
3. சிலம்பு. சிலப்பதிகாரம்.
4. மேகலை. மணிமேகலை.
5. கம்பன். கம்பராமாயணம்
6. பா. வரி. பாடல் வரிகள்.
7. விவேகா. விவேகானந்தர்

முன்னுரை :

சங்க கால முதல் இடைக்காலம் தொட்டு இக்காலம் வரை மகளிர் சிறப்பை பெருமையை மாண்பை இலக்கியங்கள் போற்றி பாடி வருகின்றது . மகளிரின் மாண்பை பதிற்றுப்பத்தில் சேர மன்னனின் மனைவியின் சிறப்பை பேசுவதில் இருந்து அறியலாம். இலக்கியத்தின் சுவைக்கும் பெருமைக்கும் வலு சேர்க்கும் வகையில் மகளிரின் தன்மையினை அந்த இலக்கியம் எடுத்துப் பேசுகின்றது. இந்திய இலக்கியங்கள் பலவற்றிலும் மகளிரின் நாகரீகம் மிக்க மாண்பை போற்றி புகழ்ந்து வருவது போன்ற பல்வேறு செய்திகளைக் காணலாம்.

திருக்குறளில் மகளிர் மாண்பு:

முக்காலத்தையும் எடுத்துப் பேசக்கூடிய இலக்கியங்களில் சிறப்பு வாய்ந்தது திருக்குறளாகும். இதில் அரசன் முதல் ஆண்டி வரை அனைத்து மக்களின் வாழ்க்கை முறையினை பற்றி அறிய முடிகிறது. இல்லத்தின் சிறப்பு பேசும் வள்ளுவர்,

இல்லதென்இல்லவன்மாண்பானால்உள்ளதென்இல்லதன் மானாக் கடை.?
குறள். 53..

என்று கூறுகின்றார். மனைவி நற்பண்பு உடையவளாய் வாழ்க்கையில் அமைந்து விட்டால் இல்லத்தில் இல்லாத பொருள் வேறு என்னவாக இருக்க முடியும். அவள் நற்பண்பு இல்லாதவளாக இருந்தால் வாழ்க்கையில் எந்த பொருளும் இருந்தும் என்ன பயனிருக்க முடியும் என்று இல்லத்திற்குரிய பெருமையினை இதன் மூலம் எடுத்துக்காட்டுகின்றார் வள்ளுவரின் இந்தப் பார்வை இல்லத்திற்குரிய மிகப்பெரிய பெருமையினை மனைவியின் சிறப்பினைக் கூறுவதன் மூலம் மகளிரின் மாண்பை அறிய முடிகின்றது .

பாவேந்தர் பாடல்களில் மகளிர்:

இயற்கை அழகைப் பாடும் பாவேந்தர் பெண்ணின் பெருமைக்கு பெண் கல்வியை போற்றிப் பாடுகின்றார். இதனைக் குடும்ப விளக்கில் ,

"கல்வியில்லா நிலம் கலர் நிலம்"

என்று கூறி பெண் கல்வியின் அவசியத்தை விளக்குகின்றார். பெண்ணைப் புகழ்ந்து பெண் குழந்தை தாலாட்டில்,

"சோலைமலரே சுவர்ணத்தின் வார்ப்படமே.
காலை இளஞ் சூரியனைக் காட்டும் பளிங்குருவே. "
என்றும்
"நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்றுக் காட்ட தமிழர்க்கு வாய்த்தவளே" (பா. வே. தாலாட்டு)

என்றும் பாடி பெண் குழந்தையின் சிறப்பை பாவேந்தர் உணர்த்துகின்றார்.. உலகின் நிலை அனைத்தையும் மாற்றும் சக்தி கொண்டவர்கள் மகளிர் என்பதை இருண்ட வீடு என்றக் காப்பியத்திலும் காட்டுகின்றார்.

சிலம்பில் மகளிர் மாண்பு :

சிலப்பதிகாரம் உலக குடிமக்களின் பெருமை கூற வந்த காப்பியமாகும். இதில் கோவலனைப் பிரிந்த கண்ணகி துயருற்றாள், இச்செய்தியை அறிந்த அவளது தோழி தேவந்தி துயர் நீக்க துன்பத்துடன் தவிக்கும் கண்ணகிக்கு அவளது கணவனை மீட்டெடுக்கும் வழியைக் கூற விழைகின்றாள். அப்போது,

"சோமகுண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கி காமவேள் கோட்டம் தொழுதார் கணவரோடு தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார்."
(சிலம்பு கனாத்திறம் உரைத்தக் கதை, பா. வரி. 59,61.)

என்று கூறுகின்றாள். இதனைக் கேட்ட கண்ணகி வர மறுக்கின்றாள். கண்ணகிக் கண்ட கனவைப் பற்றி தேவந்திக்குக் கூறுகின்றாள். அதனை மெய்ப்பிக்கும் விதமாக கோவலன் திரும்பி வருகின்றான். அவன் தனது பொருட்களை இழந்த நிலையில் கண்ணகியின் காற்சிலம்பை முதலாகக் கொண்டு மதுரைக்குச் செல்கின்றான். அப்போது கோவலன் மதுரையில் மன்னன் தவறி உரைத்த தீர்ப்பால் கொலையாகின்றான். .இதனால் சினமுற்ற கண்ணகி மதுரையை எரிக்கின்றாள். இந்நிலை கண்ட கொற்றவை கோலத்துடன் வந்த பெண்ணொருத்தி கூறுகின்றாள், இவளோ கொங்கச் செல்வி குடமலை யாட்டி தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி. ( சிலம்பு வேட்டுவ வரி பா வரி 47 50. )

என்று கண்ணகியின் பெருமை பேசுகின்றாள். மதுரை மாநகரில் கண்ணகிக்கு ஏற்பட்ட கொடுமையால் வருந்துகின்றாள். அருகில் அவளது முன்பாக மதுராபுரி தெய்வம் தோன்றி நான் மதுரையின் காவல் தெய்வம் என்று கூறி மதுரையின் பெருமை, பாண்டிய மன்னர்களின் பெருமை, வீரம் போன்றவற்றைக் கூறுகின்றது. கோவலன் கண்ணகியின் பிறப்பு செய்தியைப் பற்றியும் விளக்குகின்றது பின்னர் அத்தெய்வம் மதுரையில் எரியும் அனலை அணைப்பதற்கு கண்ணகியிடம் மன்றாடுகிறது. இது பெண் என்பவள் ஒரு பெண்ணின் நிலையை அறிந்ததை காட்டுகின்றது. தெய்வமே அத்தீயை அனைத்து இருக்க முடியும் ஆனால் கண்ணகியின் உணர்வை உலகோர் அறிந்திருக்க முடியாது. எனவே கண்ணகியின் உத்தரவை வேண்டி நிற்பது மகளிரின் மாண்பை உலகிற்கு

பறைசாற்றுகின்றது.

**மணிமேகலையின் மாண்பு:**

மணிமேகலைக் காப்பியத்தில் உதயகுமாரன் மணிமேகலையின் அழகில் தன்னை உறைய விட்டான். ஞானம் இழந்தான். நல்லறிவு ஒழிந்தான். மணிமேகலை உவவணம் சென்ற செய்திகேட்டு பார்க்கத் துடிக்கின்றான். அவனை வழிமறித்து அறிவுரை பல கூறி அனுமதி மறுக்கின்றாள் மணிமேகலையின் தோழி சுதமதி இதனை, பற்றின் பட்டி டங்குற்றக் கொள்கலம் புற்று அடங்கு அரவின் செற்ற சேர்க்கை அவலக் கவலை கையாறழுங்கல் தவலா உள்ளந்தன் பாலுடையது மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து..( மேகலை.)

என்று சுதமதி உதயகுமாரனுக்கு மணிமேகலையைப் பார்க்க அனுமதி மறுத்து உடம்பு அழியக்கூடியது நிலையில்லாதது என்று யாக்கை நிலையாமை பற்றி உரைக்கின்றாள். காதல் வயப்பட்டு மணிமேகலையைப் பின் தொடரும் உதயகுமாரனுக்கு பலவாறு அறிவுரை கூறும் சுதமதியின்நிலைப் போற்றுதலுக்குரியதாகின்றது. பின்னர் உதயகுமாரன் இதனை எல்லாம் கருத்தில் கொள்ளாது மணிமேகலையை பின்தொடர்கின்றான். மணிமேகலை குலதெய்வமான மணிமேகலா தெய்வத்தின் மூலம் காய சண்டிகையின் உருவம்கொள்கின்றாள். இதனை அறியாதக் காயசண்டிகையின் கணவன் உதயகுமாறனை கொன்று விடுகின்றான். மணிமேகலை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றாள். அப்போது சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றும் மணிமேகலை தன் எண்ணத்தை வெளிப்படுத்தும்போது,

"மண் திணி ஞானத்து வாழ்வோர்க்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே." (மேகலை)

என்று பசிப்பிணி நீக்குவதின் அவசியத்தை கூறுகின்றாள். மகளிரின் மாண்பிற்கு மணிமேகலை எடுத்துக்காட்டாக திகழ்கின்றாள் என்பதை அறிய முடிகின்றது.

**கம்பன் காட்டும் மகளிர்:**

வன்மை உயர்வு நலமெல்லாம் பெண்மையின் ஆல் உண்டென்று பேசவந்த பெண்ணழகே. என்று பெண்குழந்தை தாலாட்டில் பெண்ணின் பெருமையை பாவேந்தர் பாடுகின்றார். மக்களின் பாதுகாப்பிற்கும் பொருளுக்கும் துணை நிற்பது தெய்வங்கள் என்று மக்கள் நம்புகின்றனர். தெய்வங்கள் அனைத்தும் தங்களின் வேண்டுதலுக்கும், ஒரு நிலைப்பட்ட மனநிலைக்கும் இறங்கி வருவதாக மக்கள் நம்புகின்றனர். இலங்கை பாதுகாப்பிற்காக பிரம்மனால் அனுப்பப் பட்டவள் தான் இலங்கை மகாதேவி. இவள் இலங்கையின் ஆயுளை ஒத்தவள். மேருமலை போன்ற வடிவம் கொண்டவள். நான்கு முகங்களும் படையணி எட்டு கரங்களும் உடையவள் ஐந்து வண்ணம் உடைய ஆடைகளை அணிந்திருப்பவள். அந்த ஊர் முழுவதும் தங்கும் படியான உரை போன்ற சுழல்கின்ற கண்களையும் திங்களைவைத்தார் போன்ற கண்களையும் உடையவள். கூற்றுவனை ஒத்த

வலிமையும் தேவர்களும் அஞ்சும் கோபம் உடையவள். பிரம்மதேவனால் இலங்கை மாநகர் தன்னை காத்து வந்தாள். என்பதை, "முரண் வலி குரங்கு ஒன்று உன்னைக் கைத்தலம் மதனாற்தீண்டிற் கழிவதன் என்னை காண்டி சித்திரை நகரம் பின்னைச் சிதைவது திண்ணம்."(கம்பன்)

என்று கூறி இலங்கை நகரின் காவல் பொறுப்பை அவளிடம் பிரம்மன் ஒப்ப படைக்கின்றான். இலங்கை நகரத்தின் கோட்டை மதிலின் மேல் பகுதியில் நின்று காவல் புரிகின்ற இலங்கை மாதேவி அனுமனின் வருகையை அறிந்தவள்..காவலுக்கு இடையூறு வந்துவிட்டது என்று நினைத்து நில். நில் என்று அதட்டிக் கொண்டே அனுமனிடம் சென்றாள். அறிவில்லாதவனே கோட்டை மதிலை தாவ முயற்சித்து பகையைத் தேடிக் கொள்ளாதே ஓடிப் போ என்று விரட்டி அடிக்கிறான். மாருதி அஞ்சவில்லை சினத்துடன் பதில் உரைக்கின்றார்.

"இனி இவ்வூர் புக்காலன்றி போகலன்."
(கம்பன்)
என்று உறுதியாக கூறுகின்றான். இதனைக் கேட்ட இலங்கை மாதேவி இவன் குறங்கு அல்ல இவன் மாயப் பிறவி என்று கருதி தனது படையோடு சேர்ந்து அனுமனை விரட்டுகின்றாள். அனுமன் சூலத்தை முறித்தும் எஞ்சியவற்றை ஒடித்தும் விண்ணில் எறிந்து விடுகின்றான். ஆயுதமின்றி தவித்த இலங்கை மாதேவி அனுமனை ஓங்கி அறைகின்றாள்.

"பெண்ணிவள் கொள்ளிற் பிழை"( கம்பன்)
என்று எண்ணி அவள் கரங்கள் அனைத்தையும் பற்றிப் பிடித்துக் கொண்டு மற்றொரு கையினால் ஓங்கி அறைகின்றான். கொள்ளும் ஆற்றல் உடையவன் அனுமன். இதனை அறிந்த இலங்கை மாதேவி இந்நிலையில் பிரம்மன் கட்டளைகளையும், சொல்லையும் நினைவில் கொண்டு செருக்கு அழிந்து அனுமனிடம் உரையாடுகின்றாள். மிகப் பணிவுடன் அவனிடம் உயிர் பிச்சை கேட்டு விட்டு அவள் வரலாற்றைக் கூறுகின்றாள். பின் இலங்கை அழிவினையும் காட்டி மிக்க ஆற்றலுடைய உனக்கு முடியாதது என்று எதுவுமில்லை. பொன்மயமான இந்த நகரில் எங்கு வேண்டுமானாலும் நீ செல்வாயாக என்று கூறி அனுமனை வணங்கி விட்டு பிரம்மலோகம் செல்கின்றாள் இலங்கை மகாதேவி. இலங்கை மாதேவியைநகர் காவல் தெய்வமாக நியமித்து பிரம்மன் மிக்க வலிமையுடைய குரங்கு வந்து அவளை தன் கரங்களால் தொட்டு வரும் நாளில் நகர் காவல் ஒழித்து பிரம்மலோகம் வருமாறு கூறியக் குறிப்புகளிலிருந்து அரக்கர் கொடுமையை ஒழிக்க அனுமன் அவதாரம் எடுத்து அயோத்திக்கு கொடுக்காத காவல் சிறப்பினை இலங்கைக்கு கொடுத்து அந்த நகரின் காவல் சிறப்பினை மகளிரின் வீரத்தை பெருமை படுத்துகின்றான் கம்பன். இதன்மூலம் மகளிரின் மாண்பை அறிய முடிகின்றது.

சாவித்திரியின் மாண்பு:

அசுவபதி என்னும் அரசரின் மகளான சாவித்திரி அரச வாழ்க்கையை இழந்த



© 2022, IRJTSR 

திருமணமான 12 வது மாதத்தில் இறக்கும் விதி படைத்த ஒருவனை காதலித்து மணக்க முடிவு செய்தால். . இதனை அறிந்த அவள்தந்தை வேறு ஒருவனை திருமணம் செய்து கொள்ள வேண்டினார். சாவித்திரியின் மன உறுதியினால் சத்தியவான் என்பவனையே திருமணம் செய்து கண்டாள். குறித்த ஆண்டிலேயே அவனது விதியும் முடிந்து இறந்துவிட்டான். எமன் வந்து அழைக்க தனது கணவனை விட்டு பிரிய மாட்டேன் என்று சாவித்திரி தடுத்து நின்றாள். வாழ்விலோ சாவிலோ நரகமோ சொர்க்கமோ அவனை பின்தொடர்ந்து தான் நான் வருவேன். அதுவே எனக்கு மகிழ்ச்சி என்று எமனிடம் போராடினாள். இதைக் கேட்ட எமதர்மன்

என் மகளே உன் விருப்பப்படியே ஆகட்டும். இதோ உன் கணவனின் உயிர் என்று அவனது உயிரைத் திரும்ப அளித்தான். இது சாவித்திரியின் அன்பையும் மகளிரின் மாண்பையும் காட்டுகின்றது.. (விவேகா சொற்பொழிவு)

ராஜபுத்திர இளவரசி ரூபவதி:

முகலாய பேரரசின் கடைசி மன்னர்களுள் ஒருவனது ஆட்சி காலம். இந்தியாவின் அற்புதமான மகிமை பொருந்திய பேரரசை அழித்த கொடியவன். அவன். ராஜபுத்திர மன்னனின் மகள் அழகை பற்றி கேள்விப்பட்டான் அவளை தன் அந்தப் புறத்திற்கு அனுப்பச் சொல்லி ஆணை பிறப்பித்தான். தூதுவன் ஒருவன் அவனது படத்துடன் வந்து ரூபவதிக்கு காட்டி வருமாறு அழைத்தான். அந்தப் படத்தினை வாங்கி காலில் போட்டு மிதித்தாள். உனது மன்னனின் நிலையும் இதுபோன்றுதான். என்று வந்தவனை விரட்டி அனுப்பினால். விளைவு? சுல்தானின் படை ராஜபதனத்தில் நுழைந்தது. எதுவும் செய்வது அறியாமல் தவித்த மன்னன் மகள் ஒரு தந்திரம் செய்தாள். ஏராளமான ராக்கிகளை எடுத்து பல்வேறு ராஜபுதன மன்னர்களுக்கு,

"வந்து எங்களுக்கு உதவுங்கள்" என்ற செய்தியை அனுப்பினாள். ராஜபுத்திரர்கள் திரண்டனர். சுல்தானின் படை திருப்பி விரட்டி அடிக்கப்பட்டது. ரூபவதி காக்கப்பட்டாள். ராக்கி என்றக் கயிற்றை ஒரு ஆண் மகனுக்கு கட்டும் போது அவன் ஒரு பெண்ணிற்கு அண்ணன் என்று முறை வந்ததற்கு ரூபவதியின் செயல்பாடு உதாரணமாகின்றது. இதன் மூலம் மகளிரின் மாண்பை ராக்கியின் வரவை அறிய முடிகின்றது

முடிவுரை:

மகளிர் தங்களது மாண்பை முழுதும் அறிந்து செயல்படும் பாத்திரமாக இலக்கியத்தில் வலம் வருகின்றனர். பெண்கள் தாய்த் தன்மையோடு அன்பு கொண்டு அர்ப்பணிப்போடு இல்லறத்தை இலக்கியத்தை காத்து நிற்கின்றனர்.. என்பதை அறிய முடிகின்றது மகளிர் தங்களது தன்மையினால் உறவினர்களை போற்றும் மாண்புமிக்க நிலையினை இலக்கியங்கள், வரலாறுகள் கூறுவதைக் காண முடிகின்றது.

## ஆய்வுக்குப் பயன்படுத்திய நூல்கள்:


[1] சிலப்பதிகாரம்.அடியார்க்கு நல்லார் உரை

[2] மணிமேகலை கழக உரை.

[3] பாரதிதாசன் கவிதைகள்.

[4] கம்பராமாயணம் மூல உரை.

[5] திருக்குறள். மு. வ. உரை.

[6] சுவாமி விவேகானந்தர். (இந்திய பெண்மணிகள் சொற்பொழிவு)